1994 நவம்பர் 3]

(1) 1991-1992-ஆம் ஆண்டில் நைலான் மீன்வலை உற்பத்தி 22.5 டன்கள்.

(2) 1991-92-ஆம் ஆண்டில் குதிரை மசால் உற்பத்தி இல்லை.

(3) 1991-92-ல் நைலான் மீன்வலை விற்பனை அளவு 22.3 டன்கள்.

(4) 1991-92-ல் நைலான் மீன்வலை விற்பனை மதிப்பு ரூ. 43.79 லட்சம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை தாலுக்காவில் 400 ஏக்கர் நிலத்தில் குதிரை மசால் பயிரிடப்பட்டு ஏக்கர் 40 மெ.டன் குதிரை மசால் உற்பத்தி செய்யப்பட்டு, அந்த தாலுக்கா விவசாயிகளே உபயோகித்துக் கொண்டுள்ளன.

(இ) ஒசூர் வட்ட கால்நடை பண்ணையில் 12.5 மெ.டன் குதிரை மசால் உற்பத்தி செய்யப்பட்டு பண்ணைக் கால்நடைகளுக்கே தீவனமாக அளிக்கப்பட்டுவிட்டது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப் பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன்.

1. திரு. வி. கே. சின்னசாமி
2. திரு. கே. முனிவெங்கடப்பன்
3. செல்வி எல். சுலோசனா
4. திரு. எச். எம். ராஜு
5. திரு. ஜி. பழனிசாமி
6. திரு. செ. கு. தமிழரசன்

(ஆ) பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரு உறுப்பினர்கள் பேரவைக்கு வந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு செய்தி. புதியதாக நம்முடைய சட்டமன்றத்திற்கு பெரியார் மாவட்டம் பெருந்துறைத் தொகுதியிலிருந்தும், சென்னை மாவட்டம், மயிலாப்பூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்மோடு உறுப்பினர்களாக இன்றையதினம் அமர்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரையும் (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் அனைவரின் சார்பிலும் பாராட்டி வரவேற்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை அளித்தல். அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. கே. கே. சின்னப்பன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதி மொழிக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95—அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994-95 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல்துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-15

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,